**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாள் திங்கட்கிழமை

**IA.No.02/2024 in OS.No.21/2011**

**TNTM 03000172/2011**

குணசேகரன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. கிருஷ்ணமூர்த்தி(இறந்தார்)
2. ராஜம்மாள்(இறந்தார்)
3. மோகன்
4. மல்லிகா ...எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 26.08.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.C.D.ஜீவகசாமி,M.A.B.L., திரு.C.ஹரிநாத்,B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.M.சிவக்குமரன், B.A., B.L., திரு.S.கைலாஷ், B.E.,M.B.A.,B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் உள்ள சொத்து விவரத்தில் "A" மற்றும் B அட்டவணை சொத்துக்களில் மனுவில் கூறியுள்ளவாறு திருத்தம் செய்ய அனுமதிக்கவேண்டி இம்மனு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர்/வாதி. மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கை பாகப்பிரிவினை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கானது கடந்த 05.02.2024ம் தேதி மனுதாரர் தரப்பு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்ட நிலையில் "A" அட்டவணை சொத்தின் சர்வே எண்.45/2 என்று இருப்பதற்கு பதிலாக 54/2 என்று தட்டச்சு பிழையாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. "B" அட்டவணை சொத்தில் ஏர்ஸ் என்பதற்கு பதிலாக ஏக்கர்ஸ் என்று தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தட்டச்சு பிழைகள் தவறுதலாக ஏற்பட்டுள்ளது. அவற்றை திருத்தம் செய்ய

அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை அனுமதிக்காமல் போனால் மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்று மனுவில் விவரம் கூறப்பட்டுள்ளது.

**2. 3ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனு அபிடவிட் சங்கதிகள் உண்மையல்ல. மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரர் நிரூபணம் செய்யவேண்டும். மனுதாரர் வேண்டுமென்றே இம்மனுவை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி ஏற்புடையதல்ல. வழக்கை காலம் கடத்தவேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

4. மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை. இருதரப்பிலும் ஆவணங்கள் இல்லை.

5. **பிரச்சனைக்கான தீர்வு:-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை. இருதரப்பிலும் ஆவணங்கள் இல்லை. மனுதாரர்/வாதி அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தில் "A" அட்டவணை சொத்தில் முதல் அயிட்ட சொத்தில் சர்வே எண்.45/2 என்று தட்டச்சு செய்வதற்கு பதிலாக தவறுதலாக 54/2 என்று தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. "B" அட்டவணை சொத்தில் 1, 2 அயிட்ட சொத்துக்களில் Ares என்று தட்டச்சு செய்யப்பட்டுள்ளதாக Acres என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பே வழக்குரையை திருத்த இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை அனுமதிப்பதினால் வழக்கின் தன்மை மாறுபாடு அடையாது. எனவே இம்மனுவை அனுமதிக்கவேண்டும் என்று மனுவில் விவரம் கூறி மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்யும் போது வழக்கை காலம் கடத்த வேண்டி இம்மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

7. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள விவரப்படி அசல் வழக்கில் உள்ள சொத்து

விவரத்தில் "A" அட்டவணை சொத்தில் முதல் அயிட்ட சொத்தில் சர்வே எண்.45/2 என்றும், B அட்டவணை சொத்தில் 1, 2 அயிட்ட சொத்துக்களில் Ares என்றும் திருத்தம் செய்தால் வழக்கின் தன்மை மாறுபாடு அடையாது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேற்கண்டவாறு சொத்து விவரத்தை திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது. அசல் வழக்கை மேல் நடத்தி தீர்வு காண்பதற்கு இம்மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையை திருத்தவேண்டியது அவசியம் என்பதால் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.09.01 18:21:07 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u>** இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.09.01 18:21:14 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.